16.09.19 EVERWIN MATRIC.HR. SEC. SCHOOL Time: 2.30 Hrs.
Std: IX SUMMATIVE ASSESSMENT -1 Marks: 100

TAMIL PAPER-I

(செய்யுள், உரைநடை)

I. பலவுள் தெரிக: 14x1=14

1. தமிழ் விடு தூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர் நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. 'மிசை' - என்பதன் எதிர்ச்சொல் _________.
   அ) கீழே ஆ) மேலே இ) இலஞ்சி ஈ) பசை
3. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசுமரம் இ) வளம் ஈ) பெரிய
4. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டி மன்றம் - பட்டிமண்டபம்
5. மணிமேகலையை இயற்றியவர் _____________.
   அ) இளங்கோவடிகள் ஆ) பாரதியார்
   இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) கம்பர்
6. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
   அ) _______ இனம் ஆ) வண்ணம் ___________
   இ) ________ குணம் ஈ) வனப்பு ___________
   அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று
   இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று
7. திராவிடமொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுவது __________.
   அ) தெலுங்கு ஆ) தமிழ் இ) மலையாளம் ஈ) கன்னடம்
8. விரலை மடக்கியவன் இசையில்லை என்பது ________.
   அ) புல்லாங்குழல் ஆ) மத்தளம் இ) வீணை ஈ) யாழ்
9. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு.
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத் தொகை
10. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) ஏரி ஈ) புலரி
11. "சனிநீராடு" என்பது ________ வாக்கு.
   அ) ஔவையின் ஆ) பரணரின் இ) ஆண்டாளின் ஈ) பாரியின்
12. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
   அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
   ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
   இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
   ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்
13. இந்திரவிழா _______ நாட்கள் நடைபெறும்.
   அ) 28 ஆ) 38 இ) 48 ஈ) 68
14. திருக்குறள் _______ வெண்பாக்களால் ஆன நூலாகும்.
   அ) இன்னிசை ஆ) குறள் இ) நேரிசை ஈ) சிந்தியல்

II. எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 5x2=10

15. 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?
16. நீங்கள் பேசும்மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
17. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண் - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?
18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
19. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
20. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
21. திராவிட மொழிகள் யாவை?

III. எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்:
(28-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 5x2=10

22. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
23. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
24. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு வரைக.
25. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| (i) | பசுமண்கலத்துநீர் பெய்திரீஇயற்று | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல். |
| (ii) | தத்தம் கருமமே கட்டளைக்கல் | சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யாதே. |
| (iii) | அனைத்தானும் ஆன்ற பெருமைதரும் | சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப்போல |
| (iv) | செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை. | அவ்வளவிற்குப் பெருமை உண்டாகும். |

26. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.
27. ஐம்பெருங்குழுக்கள் யாவை?
28. 'மிகுதியான்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

IV. எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 3x5=15

29.'மூன்று' என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?
30. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.
31. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.
32. கல்லணை பற்றிக் குறிப்பு வரைக.
33. ஏறுதழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

V. எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3x5=15

34. 'தமிழ்விடு தூது' நூற்குறிப்பு எழுதுக.
35. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?
36. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
37. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.
38. பழமணல் மாற்றுமின்: புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 4x5=20

39. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i) தமிழோவியம் | - | திருவள்ளுவர் |
| ii) பெரியபுராணம் | - | கவிஞர் தமிழ்ஒளி |
| iii) புறநானூறு | - | ஈரோடு தமிழன்பன் |
| iv) திருக்குறள் | - | சேக்கிழார் |
| v) பட்டமரம் | - | குடபுலவியனார் |

40. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் 'தாய் இனம்' என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும் போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன் ஏர் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக் கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு.முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்:

i) மேலுள்ள உரைப்பத்தி எதைக் குறிப்பிடுகிறது?
ii) பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா
iii) சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?
iv) பிறக்கும்போது காங்கேயம் மாடுகள் என்ன நிறத்தில் இருக்கும்?
v) காங்கேயம் மாடுகள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள் நான்கினை எழுதுக.

41. படம் உணர்த்தும் கருத்தை நயமாக ஐந்து தொடர்களில் குறிப்பிடுக.



42. "நீர் இன்று அமையா" எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடலை எழுதுக.

VII. விரிவாக விடையளிக்கவும்: 2x8=16

43. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
(அல்லது)
ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.
44. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
(அல்லது)
ஆ) 'தூது அனுப்பத் தமிழே சிறந்தது' - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.